WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 06
THEEMPUNAL
தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:18 24.11.2023 வெள்ளிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

# தலைமை அதிகாரி இல்லாத இலங்கை இராணுவம்

"கடந்த 40 நாட்களில் இராணுவத்திற்கு தலைமைப் பணியாளர் யாரும் இல்லை. இது இராணுவத்தில் இரண்டாவது உயர் பதவி. இராணுவத்தின் வரலாற்றில் இவ்வளவு காலம் படைத்தளபதி இல்லாமல் செயற்பட்ட சந்தர்ப்பம் வேறெதுவும் இல்லை. இந்த காலதாமதத்திற்கான காரணம் எங்களுக்குத் தெரியவில்லை. இதனால் இராணுவத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும நேற்று பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சின் செலவுத் தலைப்புகளின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு விவாதத்தில் கலந்து கொண்ட போது தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் 27,000 படையினர் வெளியேறியுள்ளனர். பொது பாதுகாப்பு தொடர்பான பல மோசமான கேள்விகள் உள்ளன. நாட்டில் ஒரு மாதத்திற்கு 50 கொலைகள் நடக்கின்றன. ஒவ்வொரு 14 மணி நேரத்திற்கும் ஒருவர் கொல்லப்படுகிறார். கடந்த சில மாதங்களாக 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்" என பாராளுமன்ற உறுப்பினர் அழகப்பெரும தெரிவித்தார்.

## மஹிந்தவுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஒரு வார கால இடைவெளிக்குள் கொலை செய்வதாக மிரட்டிய நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 7 விஜயராம மாவட்டத்தில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் அதிகாரபூர்வ இல்லத்திற்கு எதிரில் நபர் ஒருவர் சத்தமிட்டு குழப்பம் விளைவிப்பதாக கறுவாத்தோட்ட பொலிஸாருக்குக் கிடைத்த... (பக் : 02)



## பெண் அதிகாரிக்காக 63 ரூபாய் செலவு செய்த மின்சார சபை

பிரான்ஸூக்கு மூன்று வார கல்விப் பயணத்தில் பங்கேற்கச் சென்ற இலங்கை மின்சார சபையின் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்காக வாங்கப்பட்ட செருப்பு, பாக்கிற்கும் 63 ஆயிரம் ரூபாவை மின்சார சபை செலுத்திய தகவல் வெளியாகி உள்ளது.

35,000 ரூபாய் செருப்பு, 28,000 ரூபாய் பெறுமதியான ஒரு பாக் என 63,000 ரூபாய் செலுத்தப்பட்டமை தொடர்பில் இலங்கை மின்சாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் நளிந்த இளங்ககோன் தெரிவித்தார்.

கொடுப்பனவு தொடர்பில் ஆராயுமாறு சபையின் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தணிக்கை அறிக்கையின் பின்னரே இவ்விடயம் தொடர்பில் உறுதியான அறிக்கையை வெளியிட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்பெண் அதிகாரி, நிதி மேலாளருக்கு உரிய தொகையான ரூ.2000 செலுத்த உத்தரவிட்டுள்ளதாக மின்சார... (பக் : 02)

# 6 வருடங்களின் பின் விடுதலையானவர்கள்

இலங்கையில் 6 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 ஆபிரிக்க பிரஜைகளை விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்துமாறு சட்டமா அதிபரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வினவியுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற சமர்ப்பணங்களைக் கருத்திற் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

30 ஆபிரிக்க பிரஜைகள் நிதி மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வெலிசர வெளிநாட்டு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை மீள ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், அவர்களின் வெளிநாட்டு பயணத்தடையை நீக்கவும் உத்தரவிட்டார்.

இந்த சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டு வெலிசர வெளிநாட்டு தடுப்பு முகாமில் 6 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை எனவும் அது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எனவும் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஷஷி குணவர்தன நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்த சந்தேக நபர்களின் உணவுக்காக அரசாங்கம் மாதாந்தம் 20 இலட்சம் ரூபாவிற்கு மேல் செலவிட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு குற்றப் புலனாய்வு திணைக்களம் 34 ஆபிரிக்க பிரஜைகளை கைது செய்திருந்ததுடன், அவர்களில் நால்வருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் பணிப்புரை வழங்கியிருந்தது.

இதன்படி, சந்தேகநபர்கள் நால்வருக்கு எதிராக அடுத்த வருடம் மே மாதம் 16 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு நீதவான் மேலும் உத்தரவிட்டார்.

# பெண் அதிகாரிக்காக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வாரிய ஊழியர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அந்தப் பெண் அதிகாரி அடுத்த ஆண்டு ஓய்வு பெற உள்ளதால், வெளிநாட்டு பயணங்களில் பங்கேற்கும் அதிகாரிகளுக்கு பொதிகள் போன்றவற்றை வாங்க மின்சார வாரிய பணத்தை பயன்படுத்த முடியாது எனவும் ஊழியர்கள் கூறுகின்றனர்.

இந்த அதிகாரி சுகயீனம் காரணமாக பணிக்கு வரவில்லை என பலமுறை மேலதிகாரிகளிடம் தெரிவித்தும் தொடர்ந்து வாரக் கணக்கில் பணிக்கு வராத போதும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மஹிந்தவுக்கு கொலை மிரட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

ஒரு வாரத்திற்குள் கண்டுபிடிக்க முடியாத வகையில் கொலை செய்து விடுவேன் என்று கூறிய முன்னாள் இராணுவ சிப்பாயை கைது செய்துள்ளதாக கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பமுனுகம கிரிவெல ஹொரபவிட்டவைச் சேர்ந்த சந்தேக நபர் தனது சகோதரியின் கிருலப்பனை வீட்டில் தங்கி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தாய்லாந்துக்குச் சென்றார் கிழக்கு ஆளுநர்

தாய்லாந்தில் இடம்பெறவிருக்கும் 2023 உலக இந்து காங்கிரஸ் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் பங்கேற்க நேற்று (23) தாய்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இன்று 24 முதல் தாய்லாந்தில் நடைபெறும் உலக இந்து காங்கிரஸ் ஒன்றுகூடல் நிகழ்வில் இந்தியா, அமெரிக்கா, நோர்வே, கனடா, ஜேர்மன், அவுஸ்திரேலியா, கென்யா, கட்டார் போன்ற 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் இராஜதந்திரிகள், அரசியல் தலைமைகள் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

# மரணதண்டனை விதிக்கப்பட்ட தமிழ் பெண்ணை விடுவிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

மரண தண்டனை விதிக்கப்பட்ட செ.சத்தியலீலாவை பொது மன்னிப்பில் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கான கோரிக்கை கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று (24) வெள்ளிக்கிழமை முற்பகல் குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் நேரில் கையளித்தனர். ஆளுநரின் சார்பில் ஆளுநர் செயலக மக்கள் தொடர்பு அதிகாரி கோரிக்கைக் கடிதத்தைப் பொறுப்பேற்றார்.

14 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பின்பு, மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ் அரசியல் கைதி தொடர்பானது.

மேற்படி, இல.6/3, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியை வாழ்விடமாகக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலா என்பவர் 14 ஆண்டு காலம் தமிழ் அரசியல் கைதியாக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல்நீதிமன்றத்தினூடாக விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேல் முறையீடு காரணமாக இப்பெண்மணி மீண்டும் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையான குடும்பத் தலைவி செ.சத்தியலீலா என்பவர் அவசரகாலச் சட்டவிதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர், சுமார் 14 ஆண்டுகள் இருந்தபடி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து கடந்த ஜனவரி 14, 2018 அன்று கொழும்பு மேல் நீதி மன்றினால் "15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத்தண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும் என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மேல் நீதிமன்றம் வழங்கிய இவ்வழக்குத் தீர்ப்பில் திருப்தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன்றம் செ.சத்தியலீலா என்பவருக்கு ஜனவரி 23, 2023 அன்று மரண தண்டனை தீர்ப்பளித்தது.

இந்தப் பெண்மணிக்கு ஏதேனுமோர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துதவுமாறு கௌரவ ஜனாதிபதி அவர்களை, ஒரு சுயாதீன மனிதநேய அமைப்பாக நாம் கேட்டு நிற்கின்றோம் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய இழுவைப் படகுகளுக்கு எதிராக முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் அமைப்புக்களும் யாழ்பாண கிராமிய கடற்றொழில் அமைப்புக்களும் ஒன்றிணைந்து இன்று (24.11.2023)முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இந்திய இழுவைப்படகுகளை தடை செய்யக்கோரி கவனயீர்ப்பு போராட்டம் நடத்தினர். இந்தியன் இழுவைமடிப்படகின் எல்லை தாண்டிய சட்டவிரோத கடற்தொழிலைத் தடுப்பதற்கான மனுவொன்றையும் மாவட்ட செயலாளரிடம் கையளித்தனர்.

அந்த மனுவில்,

"முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களாகிய நாம் கடந்த பத்து வருடங்களாக இந்திய இழுவைமடிப்படகு கடற்தொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத கடற்தொழில் தொடர்பாக கடற்தொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா ஐயாவிற்கும் தங்களுக்கும் பல தடவைகள் நேரடியாகவும் எழுத்து மூலமும் தரப்பட்ட மனுக்களுக்கு அமைச்சரதும் செயற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பதனைத் தங்களுக்கு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்தியன் இழுவைமடிப் படகுகளின் எல்லை தாண்டிய சட்டவிரோத கடற்தொழிலை மேற்கொள்வதால்: எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிப்படைந்த நிலையில் வாழ்வா? சாவா? எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது கடல்வளமான மீன் பெருக்கத்திற்கு உதவும் பவளக்கொடிகள் மற்றும் பிற கடல்வளங்களும் அழிவடைந்த நிலையில் உள்ளது. எமது எதிர்காலச் சந்ததியினரை ஒழிப்பதற்காக பெருமளவான கேரளக் கஞ்சா போன்ற உயிரைக்கொல்லும் சட்டவிரோத போதைவஸ்து வகைகளையும் இங்கே அவர்கள் கொண்டுவந்து எமது சந்ததியினரை அழிக்கின்ற தீயசெயற்பாடுகளில்ஈடுபடுகின்றார்கள். இச்சட்டவிரோத செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்துவதற்கு பொருத்தமானவர்களுக்கு கட்டளையிடும்படியும் நாம் தங்களிடம் கேட்டுக்கொள்வதற்கு தங்களுக்கு தார்மீகப் பொறுப்பு உண்டென்பதையும் இங்கே தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம் என குறிப்பிட்டுள்ளது.

# இலங்கையில் சர்வதேச இசை நிகழ்ச்சி

இலங்கை, கனடா, மலேசியா ஆகிய மூன்று நாடுகளுக்கு இடையே இந்திய இசைக்கலைஞர்களை உள்ளடக்கிய சர்வதேச இசை நிகழ்ச்சிகளின் முதல் தொடரை இலங்கை நடத்த உள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். "தேவா, ஹரிஹரன், முரளி, கிருஷ்ணராஜ், ஸ்ரீகாந்த், அனுராதா, அஜய்கிருஷ்ணா, பூஜா, அல்கா, அஜித், மனோ, சத்யபிரகாஷ், திவாகர் மற்றும் பிரபல கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர்" என்று பெர்னாண்டோ வியாழக்கிழமை (23) தனது முகநூல் பதிவில் தெரிவித்தார்.

அந்தப் பதிவில் மேலும் அவர் தெரிவிக்கையில்

உள்ளூர் ரசிகர்களுக்கு மேலதிகமாக 2,000க்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்த இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்வார்கள். 2023 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 1.5 மில்லியனைத் தாண்டும்

ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் குறைந்தபட்ச அறை கட்டணமாக நூறு டொலர்கள், நான்கு நட்சத்திர ஹோட்டல்களுக்கு எழுபத்தைந்து டொலர்கள் மற்றும் மூன்று நட்சத்திர ஹோட்டல்களுக்கு ஐம்பது டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கான் தூதரகத்தை மூடியது இந்தியா

இந்திய தலைநகர் டெல்லியிலுள்ள ஆப்கானிஸ்தான் தூதரகம் நிரந்தரமாக மூடப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் இந்தியாவிலுள்ள ஆப்கானிஸ்தான் மாணவர்கள் உட்பட பலருக்கும் பாதிப்பு இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக தலிபான் ஆட்சி நடைபெற்று வரும் நிலையில், தலிபான் ஆட்சியை இந்திய அரசு அங்கீகரிக்கவில்லை. தலிபான் அரசை




அங்கீகரிக்கும் வரை தூதரக விவகாரத்தில் முடிவு எட்டப்படாது என மத்திய அரசு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் டெல்லியில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரகம் நிரந்தரமாக மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சிறப்பு உதவிகள் இல்லாதது மற்றும் பணியாளர் எண்ணிக்கைக் குறைப்பு உட்பட சில காரணங்களால் மூடப்படுவதாக ஆப்கான் தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. தலிபான் அரசு நியமிக்கும் தூதருக்கு இந்தியா சட்ட அங்கீகாரம் அளிக்க விரும்பவில்லை என மத்திய அரசு கூறியதை அடுத்து தூதரகம் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# தாய்வானில் அவுஸ்திரேலிய போர்க்கப்பல்

சீனாவில் இருந்து ஜனநாயக ரீதியாக ஆளப்படும் தீவைப் பிரிக்கும் உணர்திறன் மற்றும் குறுகிய நீரவழியான தைவான் ஜலசந்தி வழியாக அவுஸ்திரேலிய போர்க்கப்பல் ஒன்று சென்றதாக தாய்வான் வெள்ளிக்கிழமை கூறியது.

# நெதர்லாந்து தேர்தலில் கீர்த் வில்டர்ஸ் வெற்றி

நெதர்லாந்தில் நேற்று முன்தினம் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் திடீர் திருப்பமாக, தீவிர வலதுசாரிக் கொள்கையுடைய கீர்த் வில்டர்ஸ் (வயது 60) தலைமையிலான சுதந்திரக் கட்சி (பி.வி.வி) அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

150 இடங்களைக் கொண்ட நெதர்லாந்து பாராளுமன்றத்தில் பி.வி.வி கட்சி




37 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. கடந்த தேர்தலில் வெறும் 17 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற பி.வி.வி கட்சி, இந்தத் தேர்தலில் இரண்டு மடங்கிற்கும் அதிகமான இடங்களை பிடித்தது.

தற்போதைய பிரதமர் மார்க் ரூட் அங்கம் வகிக்கும் வி.வி.டி கட்சிக்கு வெறும் 24 இடங்களே கிடைத்துள்ளன. ஜி.எல் மற்றும் தொழிலாளர் கட்சிக் கூட்டணி 25 இடங்களைக் கைப்பற்றி உள்ளது. எனவே, கீர்த் வில்டர்ஸ் தலைமையில் அடுத்த அரசு அமைவது உறுதியாகியுள்ளது.

# ஹிஸ்புல்லா தலைவர் மரணம்

லெபனானில் ஈரான் ஆதரவு பெற்று இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த ஐந்து பேர், இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஷியா இஸ்லாமிய குழு தெரிவித்துள்ளது. மூத்த ஹிஸ்புல்லா பிரமுகரும் லெபனான் பாராளுமன்ற உறுப்பினருமான முகமது ராத் என்பவரின் மகன் அப்பாஸ் ராத், உயிரிழந்தவர்களில் ஒருவர் என அந்தக் குழுவினர் கூறியுள்ளனர். இஸ்ரேல்-லெபனான் எல்லையில் வன்முறை வெடித்ததிலிருந்து தற்போது வரை, 85 ஹிஸ்புல்லா போராளிகள் கொல்லப்பட்டுள்ளதாக, ராய்ட்டர்ஸ் செய்தி முகாமை தெரிவித்துள்ளது.

# சுவாசப் பாதிப்பின் பின்னால் வைரஸ் இல்லை

புதியவகை மர்மக்காய்ச்சல் சீனாவை கடுமையாகப் பாதித்து வருகிறது.

கொரோனா பெருந்தொற்றின் தொடக்க நிலை



களின்போது காணப்பட்ட அதே நிலைமை மீண்டும் ஏற்பட்டு உள்ளது.

இது குறித்த விரிவான, கூடுதல் விபரங்களை சமர்ப்பிக்கும்படி சீனாவிடம் உலக சுகாதார அமைப்பு கேட்டுக் கொண்டது.

ஆனால், இது குறித்து சீன அரசாங்கம் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், உலக சுகாதார அமைப்பு, சீன நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையம் மற்றும் பீஜிங் குழந்தைகள் மருத்துவமனை ஆகிய வற்றை தொடர்பு கொண்டது. அப்போது பீஜிங் மற்றும் லையானிங் பகுதிகளில் அசாதாரணமான அல்லது புதிய நோய்க்கிருமிகள் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும் ஏற்கெனவே அறியப்பட்ட நோய்க்கிருமிகளால் ஏற்படும் சுவாச நோய்களின் பொதுவான அதிகரிப்பு மட்டுமே என்றும் சீன அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

# மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மேல்முறையீடு

கட்டாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியர்களுக்கு எதிரான வழக்கில் அவர்களின் மேல்முறையீட்டு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகளான புர்னேன்டு திவாரி, சுகுனாகர் பகாலா, அமித் நாக்பால், சஞ்சீவ் குப்தா, நவ்தேஜ் சிங் கில், பீரேந்திர குமார் வெர்மா, சவுரப் வசிஸ்ட், ராகேஷ் கோபகுமார் ஆகிய 8 பேர் கடந்த ஆண்டு ஆகஸ்டில் கத்தார் உளவுப் பிரிவு காவல்துறையால் கைது செய்யப்பட்டனர். எனினும், அவர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்து இதுவரை தெரிவிக்கப்படவில்லை. அதேநேரத்தில், அவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனுக்கள் பலமுறை தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்நிலையில், கடந்த ஒக்ரோபர் மாதம் அவர்கள் அனைவருக்கும் முதன்மை அமர்வு நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

# ஹூதி ஏவுகணைகளை சுட்டு வீழ்த்திய அமெரிக்கா

ஏமனின் ஹூதி படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகளை, செங்கடலில் ரோந்துப் பணியில் இருந்த அமெரிக்க போர்க்கப்பல் துட்டு வீழ்த்தியது. “கப்பல், பணியாளர்களுக்கு எந்த சேதமோ அல்லது காயமோ ஏற்படவில்லை,” என்று அமெரிக்கா கூறியுள்ளது.

ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள், ஈரான் தலைமையிலான பிராந்திய போராளிக் குழுக்களின் ஒரு பகுதியாக உள்ளனர், அவர்கள் தங்களை “ஆக்சிஸ் ஆப் ரெசிஸ்டன்ஸ்” என்று அழைக்கின்றனர். ஹமாஸ், ஹிஸ்புல்லா போராளிகளும், இக்குழுவில் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டம்

**இலங்கையரை அச்சுறுத்தும் நோய்களில் டெங்கு முக்கியமானது. நுளம்பினால் ஊருவாகும் டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் வெற்றி பெறமுடியாத நிலை உள்ளது.**

**எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கை 63,500ஐக் கடந்துள்ளது. 45 பகுதிகள் அதிக ஆபத்தானவை எனக்கண்டறியப்பட்டுள்ளது.**

**34,396 (47.5%) என்ற அளவில் நாட்டில் உள்ள அனைத்து வழக்குகளிலும் கிட்டத்தட்ட பாதிக்கு மேல் மாகாணத்தில் மிகப்பெரிய பாதிப்பு உள்ளது.**

**ண்னுஉஊஊ இன் ஆலோசகர் சமூக மருத்துவர் டாக்டர் நிமல்கா பன்னில ஹெட்டி, நவம்பர் மூன்றாம் வாரம் வரை டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 63,540 ஆக உயர்ந்துள்ளதுடன், 44 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் நவம்பர் மாதத்தின் கடைசி 18 நாட்களில் மட்டும் 3,844 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.**

**டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சுகாதார அமைச்சின் டெங்கு நோய் எதிர்ப்புப் பிரிவுகள் நகரப் பகுதிகளில் சுகாதாரப் பிரதேசங்களின் ஆறு மருத்துவ அலுவலகங்களில் துப்புரவுத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. டெங்கின் பாதிப்பு மேல் மாகாணத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இந்த வேலைத் திட்டங்கள் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.**

**கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் நவம்பர் மாத இறுதியிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் டிசம்பர் நடுப்பகுதிக்குள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முயற்சிகளை ஆரம்பிக்க இப்பிரிவு மேலும் நடவடிக்கை எடுத்துள்ளது. பள்ளிகள், வணிக வளாகங்கள், அரசு மற்றும் தனியார் தலைமையிலான நிறுவனங்கள் டெங்கு பரவுவதைத் தடுக்கும் நோக்கில் சுகாதாரக் குழுவை அமைக்க ஊக்குவிக்கப்படுகின்றன.**

**காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் மற்றும் சிறப்பு ஆலோசகர்கள் கூறுகின்றனர். எந்த வகையான காய்ச்சலுக்கும் வீட்டு வைத்தியத்தை நாடாமல் உடனடி மருத்துவ சிகிச்சை பெறவும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். வலி மற்றும் காய்ச்சலுக்கு பரசிட்டமால் (அசெட்டமினோஃபென்) பரிந்துரைக்கப்படுகிறது. ஆஸ்பிரின் பிளஸ், மற்ற சாலிசிலேட்டுகள் மற்றும் ஸ்டெராய்டல் அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் (NSAID) தவிர்க்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**டெங்கு அதிகரிப்பதற்கு சுகாதாரச் சீரின்மையே பிரதான காரணம். நாம் வீட்டைத் துப்புரவு செய்து சுத்தமாக இருந்தாலும் சுற்றுச் சூழல் அழுக்காக இருந்தால் அதனால், நாம்தான் பாதிக்கப்படுவோம். கிராமங்களில் சுகாதாரம் ஓரளவு கட்டுக்குள் இருக்கிறது. நகரங்களில் சுகாதாரம் சொல்லும்படியாக இல்லை. பிளாஸ்ரிக், பொலித்தீன், வன்டே கப்பல் குளிர்பானப்போத்தல் என்பன வீதிகளிலும் கான்களிலும் பொறுப்பின்றி வீசப்படுவதால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள்.**

**உக்கும் குப்பை, உக்காத குப்பை என குப்பை இரண்டாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளது. உக்கும் குப்பையை விட உக்காத குப்பைதான் மிக அதிகளவில் காணப்படுகிறது. அவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்தும் வேலைத் திட்டம் எதுவும் முறையாக ஒழுங்கமைக்கப்படவில்ல. வரவு செலவுத்திட்ட விவாதத்தில் சுகாதாரத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி அதிகரிக்கப்பட வேண்டும் என எவரும் குரல் கொடுப்பதில்லை. நம்மை நாம் பாதுகாத்து டெங்கில் இருந்து விடுதலை பெறவேண்டும்.**

# நினைவேந்தல் செயற்பாட்டுக்கு 17 பேருக்கு தடை

*சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் நினைவேந்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு 17 பேருக்கு மட்டும் மூதூர் நீதவான் நீதிமன்றினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் சம்பூர் பொலிஸாரினால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கமைய இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை வழங்குவதற்காக இன்றைய தினம் சம்பூர் பொலிஸார் துயிலுமில்லத்துக்கு வருகைதந்து குறித்த தடையுத்தரவுகளை வழங்க முற்பட்டபோது தடையுத்தரவில் குறிப்பிடப்பட்ட பெயர்களில் தவறாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தம்முடைய பெயர்களை அடையாளப்படுத்தக்கூடிய தரவுகள் எவையும் இல்லாமையினால் பலர் அதனை ஏற்க மறுத்ததுடன் குறித்த தடையுத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுவதாகவும் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் க.பண்பரசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். குறித்த தடையுத்தரவு உடைக்கப்படும் எனவும் தடையுத்தரவினால் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படாது என்பதனால் யாரும் குழப்பமடையவோ அச்சமடையவோ தேவையில்லை எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.*

# இரசாயனம் கலந்த பழச்சாறு விற்றவருக்கு அபராதம்

*மட்டக்களப்பில் போத்தலில் அடைத்து விற்கப்படும் பழவகைச்சாற்றில் அதிகளவான இரசாயனப் பதார்த்தங்கள்- 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதம்.*

*மட்டக்களப்பில் பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைத்து விற்கப்பட்டு வந்த பழவகைச்சாற்றில் அதிகளவான இரசாயனப் பதார்த்தங்கள் கலந்திருப்பதால் அதனை உற்பத்தி செய்த கம்பனி உரிமையாளர், விற்பனை முகவர் ஆகிய இருவரையும் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறும் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வரும் குறித்த பழச்சாற்று போத்தல்களை கைப்பற்றி அழிக்குமாறும் மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் பீற்றர் போல், பொது சுகாதார பரிசோதகருக்கு நேற்று வியாழக்கிழமை(23) உத்தரவிட்டார்.*

*அரசடி பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுவந்த மிக்ஸ்புரூட், மாம்பழம் வகைகளைக் கொண்ட போத்தலில் அடைக்கப்பட்ட பழச்சாறுகளை வாங்கி குடித்த பொதுமக்கள் பலர் குறித்த பழச்சாற்றின் சுவையில் அதிகளவு கச்சல் தன்மை இருப்பதாக பொது சுகாதார அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். இதனையடுத்து குறித்த ஹோட்டலை கடந்த ஒக்ரோபர் மாதம் முற்றுகையிட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் 200 மில்லி லீற்றர் பழச்சாற்று போத்தல்களைக் கைப்பற்றி அந்த கடை உரிமையாளர், விற்பனை முகவர், உற்பத்தி கம்பனி உரிமையாளர் உட்பட 3 பேருக்கு எதிராக மட்டுமே நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்ததுடன் கைப்பற்றப்பட்ட பழச்சாறு போத்தல்களின் மாதிரிகளை கொழும்பிலுள்ள இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பி வைத்தனர்.*

*இதனையடுத்து மிக்ஸ் புரூட், மாம்பழம், பழச்சாற்றுக்களை இரசாயன பகுப்பாய்வினர் பரிசோதித்ததன் பிரகாரம் அதில் பென்சோயிக் அமிலம், சல்ஃபர்டை, ஆக்சைடாக சல்பைட், பென்சோயிக் அமிலம் ஆகிய கலவைகளின் உள்ளடக்கம் அதிகளவில் சேர்க்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இது மனித பாவனைக்கு உகந்ததல்ல என இரசாயன பகுப்பாய்வுப் பிரிவினர் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவித்துள்ளனர்.*

# பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவின் முறைப்பாடு

*மட்டக்களப்பில் மாவீரர் துயிலும் இல்லத் துப்பரவுப் பணியில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்திய பொலிஸாருக்கு எதிராக தமிழத் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளரும் கட்சி ஆதரவாளரும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.*

*மட்டக்களப்பு தாண்டியடி, தரவை மாவீரர் ஆகிய துயிலும் இல்லங்களில் துப்பரவுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழத்தேசிய மக்கள் முன்னணிக் கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், கட்சி ஆதரவாளர் தரணி ஆகியவர்களை பொலிஸார் நேற்று வியாழக்கிழமை (23) துப்பரவுப்பணியைச் செய்யவிடாது அச்சுறுத்தல் விடுத்ததாக பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.*

*இதேவேளை வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று துப்பரவுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் அதன்போது அங்கு சென்ற வவுணதீவு பொலிஸார் துப்பரவுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாள் த.சுரேஸ் துப்பரவுப்பணியை மேற்கொள்ளவிடாது அச்சுறுத்தியுள்ளனர். இதனால் அவர்கள் தொடர்ந்து துப்பரவுப் பணியை செய்யமுடியாது அங்கிருந்து வெளியேறினர் அதேவேளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் பொது மக்கள் துப்பரவுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு சென்ற வாழைச்சேனை பொலிஸார் அவர்களை அச்சுறுத்தியதுடன் தரணி என்ற இளைஞனின் சேட்டைப்பிடித்து இழுத்து கையடக்கத் தொலைபேசியை பறித்து அச்சுறுத்தியுள்ளார்.*

*இந்த இரு பொலிஸ் நிலைய பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு எதிராக நீதி கோரி மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவிடம் பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு உள்ளான இருவரும் முறைப்பாடு செய்துள்ளனர்.*

# சஜித்துக்கு தடை விதிக்க மறுப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுத்துள்ளது. சஜித் பிரேமதாச மற்றும் ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோருக்கு சட்ட ரீதியாக அந்தப் பதவிகளை வகிக்க முடியாது எனவும், அவர்கள் அப்பதவிகளை வகிப்பதைத் தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரி இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

# மலையக ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது

மலையக புகையிரதப் பாதையை மீளச் சீர்செய்ததன் பின்னர் பதுளை வரையிலான ரயில் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. மோசமான வானிலை, பெய்து வரும்



கனமழை ஆகியவற்றாலும் மலையக ரயில் பாதையில் மரங்கள் மற்றும் மேடுகள் விழுந்ததாலும் ரயில் சேவை பாதிக்கப்பட்டது தடைகள் நீக்கப்பட்டு புகையிரதப் பாதை சீரமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிறைச்சாலைக் காவலரைத் தாக்கியவர் கைது

மினுவாங்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறைச்சாலை காவலர் ஒருவரின் வீட்டிற்குள் கடந்த மேமாதம் 12 ஆம் திகதி நுழைந்த ரவுடிக் கும்பல் அவரை துப்பாக்கியால் மிரட்டி தாக்கிய சம்பவத்தில் தொடர்புடைய ஒருவர் நேற்று பிற்பகல் தலங்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெலவத்த பகுதியில் கைது செய்யப்பட்டதாக சம்பவம் தொடர்பில் கொலை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

# 1977 க்கு பொதுமக்கள் முறைப்பாடு செய்யலாம்

நுகர்வோர் முறைப்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தொலைபேசி இலக்கமான 1977 க்கு வழங்குமாறும் அதிகாரசபை பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறது. இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் 20 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட சோதனையில் 24 கோடி ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டதாகவும் 22,000 சோதனைகளில் 3,151 அரிசி தொடர்பான சோதனைகளும் 510 சீனி தொடர்பான சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# பசு மாடுகளை கடத்தியவர் கைது

இறைச்சிக்காக பசு மாடுகளை வாகனத்தில் சட்டவிரோதமாகக் கொண்டு சென்ற நபரொருவர் மண்டைதீவில் நேற்று (22) கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மண்டைதீவு சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் நான்கு பசு மாடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் தென்னிலங்கையைச் சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

# இலங்கையில் பெண்களின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது

பெண்கள் பிறக்கும் போதே அவர்களது ஆயுட்காலம் 80 வருடங்களாக அதிகரித்துள்ளதாகவும் சராசரியாக 76/77 வருடங்கள் என கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “சிசு இறப்பு வீதம் 1000 இல் 6 ஆகவும் தாய் இறப்பு வீதம் 100,000 இல் 28.

இந்த நிலைமை கிரேட் பிரிட்டனின் ஐக்கிய இராச்சியத்தின் நிலைமையைப் போன்றது. பிறக்கும் போது பெண்களின் ஆயுட்காலம் 80 ஆக அதிகரித்துள்ளது. சராசரி 76 முதல் 77 ஆண்டுகள் என்றார்.

# பாட்டளி மீதான வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க உத்தரவு

ராஜகிரியவில் கவனக்குறைவாக வாகனம் செலுத்தி பாரிய விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை இந்த இடைக்கால உத்தரவு அமுலில் இருக்கும் என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பாட்டளி சம்பிக்க ரணவக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றை விசாரிப்பதற்கு அனுமதியளித்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த விபத்து நடைபெற்றது.

# பொலிஸ் அதிகாரியின் மோட்டார் சைக்கிளுக்கு தீ வைக்க முயற்சி

மருதங்கேணியில் விசாரணைக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிளுக்கு மதுபோதையில் வந்த நபர் தீ வைக்க முற்பட்டார்.

மருதங்கேணி நித்திய வெட்டை பகுதிக்கு கடமை நிமித்தம் தனது மோட்டார் சைக்கிளில் சென்று, மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்தி விட்டு, வீடொன்றில் விசாரணை செய்தபோது, வீதியில் நின்ற மோட்டார் சைக்கிளுக்கு மதுபோதையில் வந்த நபர் தீ வைக்க முற்பட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர் அவதானித்ததும் நபர் தப்பிச் ஓடினார். விரைந்து சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் தீயை அணைத்துள்ளார்.




மோட்டார் சைக்கிளின் என்ஜின் பகுதி சிறிதளவு சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இந்திய அணியின் இரண்டு சாதனைகள்






விசாகப் பட்டணத்தில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ரி20 போட்டியில் 209 ஓட்டங்கள் எனும் இமாலய இலக்கை விரட்டிய இந்தியா ஒரு பந்து மீதமிருக்கையில் இந்தியா 1 விக்கெட்டால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் சூரியகுமார் யாதவ் பந்து வீச்சைத் தேர்வு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 3 விக்கெட்களை இழந்து 208 ஓட்டங்கள் எடுத்தது. அதிரடியாக விளையாடிய ஜோஸ் இங்கிலீஷ் 50 பந்துகளில் 110 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்மித் 52 ஓட்டங்கள் எடுத்தார்.

209 ஓட்டங்களைத் துரத்திய இந்தியாவுக்கு ருதுராஜ் 0, ஜெய்ஸ்வால் 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். கப்டன் சூரியகுமார் யாதவ், இசான் கிசான் ஆகியோர் மிடில் ஓவர்களில் அதிரடியாக விளையாடி 3 ஆவது விக்கெட்டுக்கு 112 ஓட்டங்கள் சேர்த்தது. அதில் சூரியகுமார் 80 (42) ஓட்டங்களும் இஷான் கிசான் 58 (39) ஓட்டங்களும் எடுத்து வெற்றியை நெருங்கி ஆட்டமிழந்தனர். ஆனாலும் கடைசி நேரத்தில் திலக் வர்மா, அக்சர் படேல் போன்றவர்களின் விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்து இந்தியா தடுமாறியது. அப்போது போட்டியில் பரபரப்பு ஏற்பட்டாலும் மறுபுறம் ரிங்கு சிங் 22* (14) ரன்கள் விளாசி சிக்ஸருடன் சூப்பர் ஃபினிஷிங் கொடுத்து இந்தியாவை த்ரில் வெற்றி பெறவைத்தார்.

அவுஸ்திரேலியா நிர்ணயித்த 209 ஓட்டங்களைத் துரத்திய இந்தியா சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் தங்களுடைய அதிகபட்ச ஸ்கோரை வெற்றிகரமாக சேசிங் செய்து புதிய சாதனை படைத்தது. கடந்த 2019 ஆம் ஆண்டு ஹைதராபாத் நகரில் மேற்கு அணிக்கு எதிராக 208 ஓட்டங்களை இந்தியா சேசிங் செய்திருந்ததே முந்தைய சாதனையாகும்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 10 வருடங்கள் கழித்து முதல் முறையாக ரி20 போட்டியில் 200 ஓட்டங்களை சேசிங் செய்து இந்தியா வென்றுள்ளது.

கே.எல்.ராகுல், ரோஹித்தை மிஞ்சிய சூரியகுமார்

கடந்த 2013 ஆம் ஆண்டு ராஜ்கோட் நகரில் அவுஸ்திரேலியா நிர்ணயித்த 202 ரன்களை சேசிங் செய்ததே முந்தைய அதிகபட்ச இலக்காகும். அதைவிட இப் போட்டியையும் சேர்த்து மொத்தமாக 5 முறை இந்தியா 200+ ரன்களை வெற்றிகரமாக சேசிங் செய்துள்ளது. ரி20 கிரிக்கெட்டில் அதிக முறை 200 அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்களை சேசிங் செய்த அணி என்ற உலக சாதனையை இந்தியா படைத்துள்ளது.

1. இந்தியா : 5*
2. தென்னாபிரிக்கா :
3. பாகிஸ்தான்/அவுஸ்திரேலியா : தலா 3

ரிங்கு சிங் அடித்த சிக்ஸ் செல்லாது

கடைசி பந்தில் ஒரு ஓட்டம் அடித்தால் வெற்றி என்ற நிலை இருந்த போது ரிங்கு சிங் மிட் ஆன் திசையில் பிரமாண்ட சிக்ஸர் ஒன்றினை பறக்கவிட்டு போட்டியை முடித்தார். ஆனால் ரிங்கு சிங் அடித்த சிக்ஸர் செல்லாது என்றும் போட்டி முன்கூட்டியே முடிந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. இப்படி கடைசி பந்தில் சிக்ஸ் அடித்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாதது ஏன்? அதற்கு விதிமுறை கூறும் விளக்கம் கடைசி பந்தினை சீன் அபோட் நோபோலாக வீசியதால் போட்டி 19.5 ஓவரிலேயே முடிந்து விட்டது. கடைசி பந்தில் 1 ரன் மட்டுமே தேவை என்கிற நிலையில் பந்துவீச்சாளர் நோபோல் வீசியதால் அங்கேயே உதிரியாக ஒரு ஓட்டம் வழங்கப்பட்டு விடும். அதனால் அந்தப் பந்தில் கிடைக்கும் கூடுதல் ஓட்டங்கள் கணக்கில் கொள்ளப்படாது என்று விதிமுறை கூறுகிறது.

ஜெய்ஸ்வாலை நம்பி ஏமாந்த ருதுராஜ்

209 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியானது முதல் ஓவரின் ஐந்தாவது பந்திலேயே முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது. முதல் விக்கெட்டாக ருதுராஜ் ஆட்டமிழந்த விதத்தின் மூலம் அவர் மோசமான சாதனை பட்டியலில் மூன்றாவது இந்திய வீரராக பரிதாப நிலைக்குத்தள்ளப்பட்டார்.

அந்த வகையில் இன்றைய போட்டியின்போது முதல் ஓவரில் யாஷஸ்வி ஜெய்ஸ்வால் பவுண்டரியும் சிக்ஸருமாக விளாசி அட்டகாசமாக இன்னிங்ஸை ஆரம்பிக்க ஐந்தாவது பந்தினை லெக் சைடு திசையில் தட்டிவிட்டு ஓடினார். பீல்டர் பந்தினை த்ரோ அடிப்பதற்கு முன்னதாக இரண்டாவது ரன்னிற்கு ஓடலாம் என்று மறுபுறம் இருந்த ருதுராஜ் கெய்க்வாட்டை ஓடிவருமாறு அழைத்தார்.

ஜெய்ஸ்வாலை நம்பி கெய்க்வாடும் ஓடிவர பின்னர் ஜெய்ஸ்வால் மீண்டும் தான் ஓடிவந்த கிரீசிக்குத் திரும்பினார். இதையும் படிங்க இதனால் அவரை நம்பி ஓடிவந்த ருதுராஜ் கெய்க்வாட் ரன் அவுட் ஆகினார்.

ரி20 கிரிக்கெட்டில் பந்தை சந்திக்காமலே டைமண்ட் டக் அவுட்டாகிய மூன்றாவது இந்திய வீரர் என்ற மோசமான சாதனையில் அவர் இணைந்தார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 24.11.2023 அன்று வெளியிடப்பட்டது.